உ

கணபதி துணை.

2 - AUG 192

சூரன்குடி

பெத்தநாச்சியம்மன்

துதிமஞ்சரி.

பெருநாழி
முத்துச்செல்லையாபுரம்
வீ. சங்கமுத்துப்பிள்ளை
அவர்களால் இயற்றப்பெற்று

மதுரை
மீனலோசனி அச்சியந்திரசாலையில்
அச்சிடப்பெற்றது.

இரத்தாக்ஷி௵ ஆனி௴
1924

Q25:47
N24

உ

கணபதி துணை.

சூரன்குடி

பெத்தநாச்சியம்மன்

துதிமஞ்சரி.

பெருநாழி

முத்துச்செல்லையாபுரம்

வீ. சங்கமுத்துப்பிள்ளை

அவர்களால் இயற்றப்பெற்று

மதுரை

மீனலோசனி அச்சியந்திரசாலையில்

அச்சிடப்பெற்றது.

இரத்தாக்ஷி௵ ஆனி௴

1924

2 - AUG 1924

உ

கணபதி துணை.

பெத்தநாச்சியம்மன்

துதிமஞ்சரி.

காப்பு.

சூரங் குடிகொண்ட சூரங் குடிமருவுஞ்
சூரங் குடிலைதுதி சொல்லவே—வாரம்
பணைக்கை குவிப்பாம் பவளமலை மேனிப்
பணைக்கைமுக வென்று பகர்ந்து.

முருகக்கடவுள்.

ஐமக்கு மாராய் வனநாவி னாலுஞ் சொலற்கரும்பொன்
றமக்கு மாராய மனுக்கோர் மருகனைத் தாவளரீ
றமக்கு மாராய திபதியென் றுள்ளி யுடல்புணர்ந்து
நமக்கு மாராயவென் றோதிடு வார்க்குண்டு நன்மைகளே.

பதிகம்.

ஆசிரிய விருத்தம்.

கமலால யக்கடவுண் மறைநாவி ருக்குமொரு
கலைமாது மலர்மங் கையுங்
கருதரிய ஞானப் பெருந்தேவி யுங்கணு
கப்பெற் றனைத்து லகமுங்
தமராக வைக்குமுயர் கல்வியுஞ் செல்வமுஞ்
சாற்றரிய வீடு முதவிச்
சங்கரர் தமக்குமொரு பங்குங் கொடுத்தமா
திருவகா ரணபூ ரணி

இமவா னிடத்திலொரு மகளா யுதித்ததுவு
மெனகா ரணத்தி னாலோ
இந்த்ரலோ கத்தாசு தந்தகந் தப்பொருளை
யீன்றெமக் கருள்பு ரியவோ
அமரா பதிக்குமுய ரளகா புரிக்குமிக
ரணிமேவு சூர நகர்வாழ்
அமுதத்தின் மாட்சிபெறு சமுகக்ரு பாட்சிவா
மருள்பெத்த நாச்சி யுமையே. (க)

சம்மா விருக்கின்ற சிவனை மலப்பேய்
தொடர்ந்ததெந் தக்கா லமோ
சொல்லரி தநாதியெனின் முத்திகா லத்திலது
தொழிலற் றிருப்ப தென்னோ
சம்மார கர்த்தனு மநாதியே பவனுமொரு
சமையத் திலயமா வனோ
சந்தேக மில்லைதா லீபுலா கத்திறுஞ்
சங்கரனு மந்த னன்றே
கைம்மா வுரித்தவனை நித்தனென் றடியார்கள்
கழறுங் கணக்கென் னகாண்
கங்காளி பயிரவி வாகினிரி சூலிமுக்
கண்ணியோங் கார ரூபி
அம்மாநின் மாங்கல்ய வல்லமையி னாலென்ன
வறியாரு முணர்வ ரன்றே
அமுதத்தின் மாட்சிபெறு சமுகக்ரு பாட்சிவா
மருள்பெத்த நாச்சி யுமையே. (உ)

ஏனோ வுனக்கிந்த மனவயிராம் யானென்ன
வென் றமுத வாப்பா வியா
இருவினைப் பாசவச மாகியுழல் பேதைமே
லென்னகுறை நீசொ லம்மா
தானே யறிந்திடா தறிவிக்க வறியுமெனல்
சதுர்வேத சார மலவா
தலையோடு விளையாடு நடமாதை யடைவோடு
சதிபேதம் வினவன் முறையோ

வானேய வானில்வரு மங்குலே மங்குல்வரு
மழையே மழைக்கு முதலே
வரைராஜன் மெச்சுதுரை மகளே யெனக்கருள்
மார்ச்சால ஞாய முளதே
ஆனக முழக்கமதை மழையென்ன மயிலாடு
மணிமேவு சூர நகர்வாழ்
அமுதத்தின் மாட்சிபெறு சுமுகக்ரு பாட்சிவா
மருள்பெத்த நாச்சி யுமையே. (௩)

என்னவோ சிற்சில மருந்தினை யருந்தினவ
ரென்றைக்கு மிறவார் களாம்
இளமையு மறார்களாந் தேகத்தி லூறுபா
டெவையாலு மடையார் களாம்
சொன்னநிற மவர்மேனி யாகுமா மத்தகைய
தொன்மருந் தெண்ணில் கோடி
தொல்லுலகி லுளவா யிருக்கவும் பொன்னடித்
தொண்டனேன் சிந்தை யுருகி
உன்னடிய ரொடுகூடி மன்னுபர மானந்த
வொப்பற்ற சலதி மூழ்கி
உண்மைநிலை யறியவென் சித்தந் திரும்புதற்
கொருமருந் தேனு மிலையோ
அன்னநிரை துன்னுதிரை மன்னுபுனல் வாவிசூ
ழணிமேவு சூர நகர்வாழ்
அமுதத்தின் மாட்சிபெறு சுமுகக்ரு பாட்சிவா
மருள்பெத்த நாச்சி யுமையே. (௪)

எண்ணரிய பலபிள்ளை பெற்றதா யவைகளிலொ
ரேழைமக னோயில் வீழ்ந்தால்
ஈடறு மருந்துபல நாடியது தீர்வதற்
கெண்ணுவள் கொலோ வலாது
திண்ணமறு பேதையிவன் வீதலே நன்றெனச்
செம்மாந் திருப்பள் கொல்லோ
செம்பிற் களிம்பென நெருங்கிவரு மாணவத்
தீயவெம் பிணியி னாலே

பெத்தநாச்சியம்மன்

கண்ணுபா மறியாம லெண்ணமிடு சிறியேனை
நல்லருண் மருந்து தந்தே
கழுவாது காக்கும் பொறுப்புனக் கல்லாது
காட்டிலெவ ருக்குண்டு காண்
அண்ணலம் புயன்மாது தன்மாமி யுடன்வாழு
மணிமேவு சூர நகர்வாழ்
அமுதத்தின் மாட்சிபெறு சுமுகக்ரு பாட்சிவா
மருள்பெத்த நாச்சி யுமையே. (௭)

மலையாச னீன்றருள்கண் மணியேயு னடிமைபுவி
வாஞ்சைப் பிணிக்குண் மூழ்கி
மதிகெட் டலைந்திடல்ச மதியாகி மதியாக
வாளா விருத்தன் முறையோ
பலபட வுரைக்குமென தினியமொழி செவிகளிற்
படவில்லை யாகோ பமா
பகுமான மாகெடிய பிடிவாத மாகொடிய
பகையாளி நானல் லவே
சிலைமலையி னைக்கொண்ட வலவன்மொழி கொள்ளாத
செவியுடைய மகரா சியே
சிறுமி யுணக்குபா தவர்மா திருக்கொண்டு
திரிதந்த செய லறிதிரே
அலர்மேலு மங்கைதின மயரா திருந்துவன
சணிமேவு சூர நகர்வாழ்
அமுதத்தின் மாட்சிபெறு சுமுகக்ரு பாட்சிவா
மருள்பெத்த நாச்சியு மையே. (௮)

பாமனை நயக்கின்ற பேதையைச் சந்தம்
பாமனை நயக்கி யென்றும்
பஞ்சதரு வாயிலுந் திறைகொண்ட லோபியைப்
பஞ்சதரு வாவ னென்றும்
உரைபல பிதற்றியிரு காமது பாப்பிமுழு
வுடலையும் வளைத்து நாணு
துலையாத வஞ்சரிட மலையாத விந்தவா
மூனைவேண்டி னேனன் னையே

இரவாது பாசமற் றிருக்கவிட மறுதந்த
　　இன்றுநேற் றல்ல கண்டாய்
　இறைவன்முத லாறுபொரு ளாதியிலை யென்றுணர்ந்
　　தெப்பொருளு மெக்கா லமும்
அரணடிமை யெனநிலவு சித்தாந்த சைவர்பணி
　　யம்போ ருகக்கண் மானே
　அமுதத்தின் மாட்சிபெறு சமுகக்கு பாட்சிவா
　　மருள்பெத்த நாச்சி யுமையே. (எ)

வனசா ரிடைப்புக்க வர்சிளங் குமரனை
　　மகாமண்ட லேச னொருவன்
　மைந்தநீ வேடனலை யானென்ப தறிதியென
　　மணியா சனத்தி ருத்திப்
புனைவன கொடுத்துகனி யினமொடு பழக்கிய
　　புராதன நினைத்தி டாது
　புந்திக்கு ளாசனையு நிந்தித்து யானே
　　புவிச்சக்ர வர்த்தி யெனல்போல்
தனுகரண புவனபோ கங்களீ யல்லாது
　　தானில்லை யென்ப தறியுஞ்
　சாந்தப் பிருங்கிமுனி யென்றப் பிதஞ்செயத்
　　தன்னுளத் தெண்ணி னானே
அனையனை வருத்தியதுன் னினைவினின் மறக்கருணை
　　யன்றோ வறக் கருணையோ
　அமுதத்தின் மாட்சிபெறு சமுகக்கு பாட்சிவா
　　மருள்பெத்த நாச்சி யுமையே. (அ)

கண்கண்ட தெய்வநீ யெனல்கண்ட சாத்திரக்
　　கரைகண்ட பெரியோர் களும்
　கதிகண்ட முத்தருங் கற்கண் டெனச்சொலிக்
　　கைகண்ட பல னடையவும்
மண்கண்ட பூமியின் மனங்கண்ட காடெலாம்
　　வம்புகண் டலைய லாமோ
　மணிகண்ட னழன்மேனி யைக்கண்ட பாதியா
　　வகிர்கண்ட திருமே னியாய்

பண்கண்ட சிறுவன்வாய் பால்கண்ட கொங்கையாய்
படர்கண் டனைக்கு ளாகப்
படர்கண்டு ளடிமையினி யிடர்கண்டி டாதுயப்
பண்ணலுன் கடமை கண்டாய்
அண்கண்ட கரைகடொறு மலர்கண்டன் மனமேறு
மணிமேவு சூர நகர்வாழ்
அமுதத்தின் மாட்சிபெறு சமுகக்கு பாட்சிவா
மருள்பெத்த நாச்சி யுமையே. (௯)

கான்பட்ட குழலியுனை வழிபட்ட் வடியனேன்
கடைபட்ட வெண்ட யிருபோற்
கவர்பட்ட நெஞ்சினொடு துயர்பட் டிடற்கென்ன
கறைபட்ட கன்மி நானோ
தேன்பட்ட கொன்றைமுடி யான்பட்ட மஹிஷியே
சீரடிப் பட்ட சான்றோர்
தென்பட்ட பத்தியி லொருப்பட்ட மனதொடு
சிறைப்பட்ட தெள் ளமுதமே
மேன்பட்ட கல்வியும் விழுப்பட்ட செல்வமும்
வியன்பட்ட வுண்மை யறிவும்
மெய்ப்பட்ட சீலமுங் குடிகொண்ட துய்யகுண
மெய்யரொடு கூட்டு கண்டாய்
யான்பெற்ற பேறுசிலர் யாரடைகு வார்புவியி
லணிமேவு சூர நகர்வாழ்
அமுதத்தின் மாட்சிபெறு சமுகக்கு பாட்சிவா
மருள்பெத்த நாச்சி யுமையே. (௰)

இரட்டைமணி மாலை.

வெண்பா.

கங்கைச் சடைமுடியார் கங்கைக்கொண் டாரிடத்தாய்
கங்கைப் பெறுவா கனமாயன்—றங்கையே
கன்றுறைச்சூ ரன்குடிலங் கண்டரிமுன் காத்தாங்கு
தென்றுறைச்சூ ரன்குடியாய் செய். (க)

கட்டளைக்கலித்துறை.

செய்பம்பு சூழுந் திருச்சூர மாநகர் சென்றுவரக்
கையம் புயம்பொருந் தும்பெத்த நாச்சியைக் கண்டிறைஞ்சி
ஐயம்பு மாரன் பிணிபோம் வறுமை யகலுங்கண்டீர்
மையம்பு ராசி புடைசூ ழுலகத்தின் மானிடரே. (உ)

வெண்பா.

மானக் கருடன்மிசை வாவுவான் வாழ்க்கைபொய்சீ
மானக் கருடன்வளர் வான்றிருப்பொய்—யானவெனப்
பெத்தநாச் சிக்கிசைப்பாப் பேசாயே லென்செய்வாய்
சத்தநாச் சிக்கிவிழுந் தால். (ங)

கட்டளைக்கலித்துறை.

தானத் தனத்கத்தத் தத்தாவென் றாடிய சங்கரனூர்
மாநத் தனத்தத்தண் டாயுதன் மற்றையர் வாழ்க்கையெல்லா
மீனத் தனத்தத்த டாதகைத் தேவி வியன்மலர்ப்பூங்
கானத் தனத்தத்தை யாள்பெத்த நாச்சிகட் கட்டளையே. (ச)

வெண்பா.

கட்டப் படவிடுத்தாற் கண்டோ ருனைப்பழிப்பார்
வட்டக் கமலமுக வல்லியே—தொட்ட
வடிமைகுறை நீக்காதா னுண்டவனே சூரன்
குடிமயிலே வன்மமெதற் கு. (ரு)

கட்டளைக்கலித்துறை.

குஞ்சரஞ் சஞ்சரஞ் செய்கானிற் குஞ்சென்ற நாவலனை
வஞ்சரஞ் சஞ்சர வேள்போல வேலன் வருத்துமங்காண்
மஞ்சரஞ் சஞ்சரக் கோதைதமைக் கண்ணிவந் தாயில்லையே
கஞ்சரஞ் சஞ்சர ணஞ்செய்பெத தன்னைனை காப்பிதுவே. (௬)

வெண்பா.

வேதன் குடைநிழற்ற விண்ணோர் பதிசபலப்
பாதபடி தாங்கிப் பணிந்துநிற்ப—மாதனை தன்
கண்பார்த்து வாய்புதைப்பக் கன்னிபெத்த நாச்சியுமை
பண்பார் கொலுவிருப் பள். (௭)

கட்டளைக்கலித்துறை.

இருகால மல்ல தொருகால மாகினு மின்பமிக்குக்
குருகால மாம்பொழிற் றென்பாண்டி நாடன் குலவிளக்கைக்
கருகால வேல்விழி யாள்பெத்த நாச்சியைக் கண்டிறைஞ்சீர்
வருகால தூதருக் கென்சொல்லு வீர்மட மாந்தர்களே. (௮)

வெண்பா.

மாந்த ரிதயத்து மங்கைநல்லார் கொங்கையினுஞ்
சாந்தந் துலங்குந் தடம்பதியே—ஏந்துசிவன்
பன்னிபெத்த காலத்தும் பத்தர்களை யாதரிக்குங்
கன்னிபெத்த நாச்சியிருக் கை. (௯)

கட்டளைக்கலித்துறை.

கையனந் தங்களும் வேண்டுங் கொலோவென் கவியகற்ற
வையகந் தக்கா மொன்றே யமையுமன் றாலமுண்ட
மெய்யனந் தஞ்சன காதிக்குக் காட்டுங்கை மேலுமுண்டோ
செய்யனந் தங்குந்தென் சூரன குடிக்கன்னை செப்புகவே. (௰)

வெண்பா.

செப்புகவி யௌவைசிறி தேகாலை நீட்டிடநெ
ருப்புகவி ழிந்தனையீ தொண்ணுமோ—விப்பொருட்ப
வஞ்சமெல்லா நீயென்றுண் மாதுபெத்த நாச்சியே
பஞ்சையல பண்டிதைசொற் பார். (௰௧)

கட்டளைக்கலித்துறை.

பாடா துனைநினை யானத னாலென்ன பங்கமுற்று
வாடாத் தவத்தன் சிவவாக் கியனை மயக்கநின்றுப்
ஆடாச் சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருகாற்
கோடாமை சான்றோர்க் கணிபெத்த நாச்சி குறித்திலையே. (௰௨)

வெண்பா.

குறிபூண் டொருகுறியைக் கொண்டுகுறி தாமுங்
குறியாஞ் சிவனடியார் கும்பிற்—சிறியேனைச்
சோதத் திருவருள்செய் தேவிபெத்த நாச்சியே
யாருக்கோ வந்தவிருந் தா. (௰௩)

கட்டளைக்கலித்துறை.

வந்திச் செழும்பொழு தேகவிக் கோடையை மாற்றுமன்பாற்
பிந்திச் செழுப்பொழிற் போரசைக் காற்றைத்தம் பிக்கவிடும்
புந்திச் செழும்பொழி மின்னார் மயற்றிரை யைப்பொதுக்கும்
கந்திச் செழும்பொழிற் சூரன் குடியிலொர் கற்பகமே. (௰௪)

வெண்பா.

கற்புக் கருங்கலமாங் கன்னிபெத்த நாயகியாள்
வெற்புக் கருங்கலமா வீணன்மனத்—திற்புகுந்தாள்
இடக்காற் றுக்கன்வலி யிண்டேன் கிரிசார்ந்தும்
வாடக்காற் றுக்குமலை வா. (௰௫)

கட்டளைக்கலித்துறை.

வாவிக் கரையெங்குஞ் செந்தேன் பொழியு மாங்கன்குயில்
கூவிக் கரையழைக் தேமேவுஞ் சூரன் குடிவளரு
தேவிக் கரைமனங் கொண்டேனுஞ் சிந்திக்கி லாச்சிறியோர்
தாவிக் கரைந்தழு தாலும் கெடார்பவச் சங்கடமே. (௰௬)

வெண்பா.

சங்கம் புகழ்ந்திடமிச் சங்கம்பன் போலபிர
சங்கம் புரியுந் தமிழ்ப்புலவீர்.—அங்கம்
கனிதரைவீழ் மூன்புபெத்த நாச்சியைப்பா டாதே
மனிதரையேன் பாடுவீரம் மா. (௰௭)

கட்டளைக்கலித்துறை.

மாதுக் கரும்பனைக் கைக்கோட்ட னெந்தையை வாழ்த்திநறும்
போதுக் கரும்பனை வேத்தியங் காட்டிப் புனிதமுற்றார்
வாதுக் கரும்பனை யொப்பாளின் ஞாகத்தின் மாசென்றெண்ணார்
ஏதுக் கரும்பனை வாய்பெத்த நாச்சி யிவர்பிறப்பே. (௰௮)

வெண்பா.

பேதப் பிறவிப் பிணிக்கு மருந்தாகும்
மாதுபெத்த நாச்சி மணிமுறுவல்—சீதமுகை
தொண்டையஞ்சி லம்பலம்பு சொற்கங்கண் வாய்குழலாள்
தண்டையஞ்சி லம்பலம்புந் தாள். (௰௯)

கட்டளைக்கலித்துறை.

தாளத்தை யோடிடத் தாளத்தை வீட்டைத் தருணசக்ர
வாளத்தை வீசப்பா வாளத்தை வென்றசெவ் வாய்நகிலாள்
நாளத்தன் றுமலா நாளத்தன் றாய்பெத்த நாச்சிதிருக்
காளத்தை யேந்திய கையானைப் போற்றுவர் கங்கைவைத்தே. (௨௰)

கட்டளைக்கலித்துறை.

கொங்கடர் மாலைக் குழலார் முயக்கிற் குறிப்புவைத்தே
வெங்கட வாரணங் கொப்பத்தில் வீழ்ந்தென வீழ்ந்துநின்றேன்
எங்கட செல்கின் றனையேதை யேயென் றெனைத்திருத்திச்
சங்கடந் தீர்ப்பளெந் தாய்பெத்த நாச்சி தயாபரியே. (௧)

இந்தாபந் தாவென்னு மானனங் கொங்கை யெழின்மடவார்
தந்தாபந் தங்கெடக் கேட்டதெல் லாந்தந்தத் தையலர்கோ
பந்தாபந் தீர்க்குந் தொழின்மேற் புகுந்திட்ட பாதகனேன்
சந்தாபந் தீர்ப்பளெந் தாய்பெத்த நாச்சி தயாபரியே. (௨)

பண்டா ரணைமுணர் பார்ப்பார் குலத்தொரு பாவலவன்
மண்டா ரிருவிற் குருநா ளதனிலொர் மன்னன்முன்னு
வெண்டா ளவனை யழைத்தே பிழைக்கும் விதம்புரிந்தாள்
தண்டா மரைமுகத் தாய்பெத்த நாச்சி தயாபரியே. (௩)

வருக்கைக் கனியின் செழுஞ்சாறு பொங்கி மடைதிறந்து
திருக்கைக் குலக்கைப் புரட்டும் பணையுச் சினிமன்னற்குப்
பெருக்கைப் படைத்த வயலைதப் படைத்துப் பிரமனது
தருக்கைச் செகுத்தவள் தாய்பெத்த காச்சி தயாபரியே. (௪)

ஏத்திய தொண்ட ரிருபேரு மக்க ளிருவர்களுங்
கூத்தியல் லாக்கங்கை மின்னாளுங் காணக் குடமுழவம்
காத்தமிழ் போலண்ணல் வாசிக்க வெப்படி காணமின்றித்
தாத்தவென் றாடினள் தாய்பெத்த காச்சி தயாபரியே. (௫)

பத்திப் பயன்கொண்ட பாவாண ருக்குந்தன் பத்தருக்கும்
குத்திரஞ் செய்யுங் கொடியோர் குலத்தைக் குடர்குழம்ப
வத்திரஞ் சோறுங் கிடையா தலைந்து மறுகவிட்டுச்
சத்தியிற் குத்துவள் தாய்பெத்த காச்சி தயாபரியே. (௬)

மேலாட்டங் கொள்ளப் புனன்மூழ்கி வெங்கதிர் வீசுமுன்னே
சேலாட்ட வாள்விழி மின்னார் வலங்கொண்டு சேவைகண்டாற்
கோலாட்ட மண்டபந் தாழ்வார மெங்கும்பொற் கோயின்முன்னுந்
தாலாட்டங் காண்பவள் தாய்பெத்த காச்சி தயாபரியே. (௭)

அண்டிப் பணியு மடியாரை யந்தக னாட்கள்வந்து
மிண்டித் துயர்செய்யும் வேளையி லேயந்த வெய்யவரைக்
கண்டித்த பாசக் கயிற்றோடு காதையுங் கத்தரித்துத்
தண்டித்துப் போக்குவள் தாய்பெத்த காச்சி தயாபரியே. (௮)

மைவந் தணவுந்தன் சோலைச்செங் காட்டினின் மால்விடையார்
தைவந்த நிற்குந் தெரியாம லூனைச் சமைத்துந்தின்னார்
மெய்வந்த னாகிசை வப்பேர் படைத்து விளங்கவுசீ
சைவந் தணைந்ததென் றாய்பெத்த காச்சி தயாபரியே. (௯)

நந்தா வளத்திருத் தென்சூரா மாநகர் நாரியன்புச்
சிந்தாவ ளத்துணைச் சீர்கண்டுஞ் சிந்திக்கி லாமடவோ
ருந்தா வளத்தினுக் கேக்குற்ற காலத்து மூத்தரிப்பாள்
தந்தா வளத்தண்ணல் தாய்பெத்த காச்சி தயாபரியே. (௰)

விருத்தம்.

கடித்தவசம் படியரையா ணம்பவென நின்பதிநின்
னலப்பா டாதே
படித்தவசம் படியரைய மிடியரைக்காப் பாற்றிடும்விற்
பன்னு வென்றே
மடித்தவசம் படியரையுங் கொடுத்தறியா மடக்கயவர்
மகிழப் பாடிக்
குடித்தவசம் படியரைப்போ லுழந்தேனுக் கருள்சூரான்
குடிபெர் தாயே, (௧)

சதுப்பணைக்கா ரப்பயலா வதுபோலத் தரித்திரத்தா
லறிவு சாம்பி
மதுப்பணைக்கா ரப்பயல னிதமிதெனக் கன்னலென
வாள ராமே
பதுப்பணைக்கா ரப்பயமு தவுதலையின் மணியெனவு
மரும்பாப் பாடிப்
புதுப்பணைக்கா ரப்பயல்கள் பாற்போகா தாள்பெத்தற்
புதப்பொன் மானே. (௨)

மோலிக்குஞ் சரவிணத்தன் மூலமுத லைப்பயந்த
முதல்வி சிறிப்
பிலிக்குஞ் சாவிணத்த லையைப்பிளக்கும் பெற்றியெனப்
பெலத்தை வாங்கும்
வாலிக்குஞ் சாவிணத்தொன் றெய்தபிரான் றிருத்தங்கை
வளரு மன்பு
பாலிக்குஞ் சாவிணத்தங் கண்ணுதற்பெத் தாசிசுகம்
படைத்தாள் வாளே. (௩)

பருத்தாசிப் புறம்பொசியும் பாழுடலுக் கிரைதேடிப்
பலநா ளாக
வருத்தாசி வாசிகொளு முழுத்தமுட்டாட் டடியர்திண
மொதுங்கி வாழுக்

...துளசி யத்தனையுங் கால்படியத் திரிந்தேன்செந்
திருவாழ் மாடக்
குருந்துளசி ரவிபச்சைப் பரிகடத்தருஞ் ஞானகர்
முடிகொண் டானே. (௪)

ஒருகவளம் புசிப்பினுக்கு முலோபரிடஞ் சென்றுமன
முடைகு வோரே
குருநவள வும்பொலியுங் குளிர்வாவிச் ஞானகர்க்
குமரி யன்பர்
பெருகவளந் தருபெருக்க மாச்சிபுகழ் மனமுருகிப்
பேசும் பூமான்
மருகவள வாவெனப்பூ தலர்ததிக்க கலங்கதிக்க
வாழ்விப் பானே. (௫)

இதம்பதமா வெத்தொழிலு முடித்திடவல் லவரெனினு
மெப்பா வேனும்
பதம்பதமா வெடுத்தருத்தம் பண்ணுமறி வினரெனினும்
பசும்பொ னாங்
கதம்பதமா லம்புனையும் பெத்துமைபா தங்கருதார்
காட்டு வாய்நீச்
சிதம்பதமாய்த் திடவைத்த கைகாட்டி மாமென்றே
செப்பு வாரே. (௬)

அம்பலத்தை யாடரங்க மாக்கியவென் னப்பனிடத்
தமர்ந்தோய் நின்வாய்த்
தம்பலத்தை யாடரங்கத் தனிமடையன் வாய்ப்பெறறுந்
தமிழ்ப்பா வலோ
தும்பலத்தை யாடரங்கப் புவியரசர் சிரத்துளக்கத்
துலக்கி னுன்செய்க்
கம்பலத்தை யாடரங்கம் பு... குடியா...ன்
கருணை யென்... (௭)

181962
தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
181962

குலகிரிகொண் டலைத்தாவு மிமயவரைக் கருங்குயி
குணம்பா டாமற்
பிலகிரிகொண் டவிராகக் குறிஞ்சிதழு வியபாக்கள்
பிதற்றி மாறா
மலகிரிகொண் டலைந்தேனுக் கெக்கதிகிட் டிடுமோபொன்
மலர்ப்பூங் காவி
ணிலகிரிகொண் டையிற்றொனிக்கும் பெத்தாசி சித்தமகிழ்ந்
திசைத்தி டாயே. (௮)

மருவசனம் பகத்தாலம் பொடியா ளவன்சினந்து
மலாம் பாலே
சருவசனம் பகத்தாலங் சம்பிதம தாக்குதலுன்
சகாய மன்றோ
ஒருவசனம் பகத்தாலங் கம்பெறவிற் றிருந்துசன
காதி யோர்க்குத்
தருவசனம் பகத்தாலங் களம்புனைவா ரிடத்தமர்பெத்
தநாச்சித் தாயே. (௯)

ஒருதமாக் கிளைவருவார் திருக்கரந்தொட் டம்மியின்மே
லுய்க்கப் பெற்ற
மருதமாக் கிளைமொழிப்பெத் தாசிபதம் நின்றலைமேல்
வதியப் பெற்றாய்
பொருதமாக் கிளைதமக்கும் பொருந்தலனீ யெத்தவந்தான்
புரிந்தாய் கொல்லோ
பெருதமாக்கிளைக்குரத்திண் கோட்டெரிக்கண்வாட்டடக்கைப்
பெருமை யோனே. (௰)

நாஷி

திருப்புகழ்.

வீட்டினிற்சி றப்புடைக்கண் ணாட்டியைக்கொ திக்கவிட்டு
வார்த்தையிற்ப கட்டலுற்ற போக்கிரிச்சி றக்கிகட்கு
விருப்பமு டன்கனக பொருட்குவை யும்பணியு
முறைப்படி தந்துபல விதப்பிணி கொண்டுகன
வேதனையி னாவிரண வாதனையி னாலுடல
மானதொரு கோடரமெ னாமிகவும் வாடியுமோர் வெறியேறி
வேப்பிலைக்க சப்பைமொத்த மாத்தினச்சொ லிச்சொலிப்பி
னாக்கினைப்பி டித்திழுத்து ஆக்கினைக்கு ளப்படுத்தி
வெருட்டிட வந்ததென வருட்டிற நின்றகதை
சரித்திர மென்றவிவை தினைத்துணை யுஞ்செவியின்
மேவிடிலை யோகொடிய பாவமென வேசெவியை
மூடுகொடி யேனையட பேதைமக னேயெனவு மருள்வாயோ
காட்டினிற்று ணைப்பெணைப்ப ராக்கினிற்சி றைப்படுத்தி
ராக்கதக்கு லத்தைவெட்டி மாய்த்தவச்சி ரச்சிலைக்கை
கடைப்புரு வந்தடவு திடத்தநெ டுங்குரிசி
லடைக்கல மென்றவொரு குரக்கர சன்பரவு
காலனொரு காலனா காமலடி யாரையுயர்
வானபத மேவுமென வேவுபிர தானகுண ரகுராமன்
காப்பியத்தை வெற்பிடைச்சி லாக்கியப்ப டப்பொறிக்க
வாற்றலிற்க தித்தவுக்ர காத்திரப்ப னைக்கையத்தர்
கருத்தொரு சங்கைகொள நிறுத்திய தன்பிறகு
எழுத்தெழு தும்படிமு னுரைத்தரு ளெந்தைபிச
காமனுயர் மாவலிமண் மூவடிகொண் மாயவர்ச
கோதரிபு ராதனிவ ராகிமக ராசிகனி திரிசூலி
நாட்டியத்தி னிற்சிவத்தை யாட்டிவிட்ட சிற்பாத்தி
கூட்டினிற்கி ளிக்கலர்க்கை காட்டியற்பு தத்தமிழ்க்கொள்
நறைப்படு கொண்டையழ கினுக்கொரு கொண்டன்மூது
கிடத்தகு சுந்தரிவி ணிடத்தவர் வந்தொருவி
நாடிதவ ரூதபடி கூடியொரு கோடிமனு
வோடுபணி தேவிசிவ காமியபி ராமிபரை அபிராணி

காத்திகத்தி னிற்குளித்து வேத்திரப்ப டைக்கையத்த
ஞுத்திரத்தொ டுச்சரித்த சாத்திரத்தை விட்டகெட்ட
நவைப்படு வம்பர்களை யுருக்கியொர் கொம்பினிடை
பொதுத்தெரி கின்றபெரு நெருப்பிடை வெந்துவிழ
ஞாலையிரு கூறுபட வீறுமொரு சூலிபட
நாகமணி தோளியிம வான்மடியின் மீதுலவு சிறுபூவை

பாட்டளிக்கு ழுக்களூற்ற பூக்களிற்க ளித்துநித்த
மாட்சிமைக்க டுத்தசத்தி கீர்த்தனத்தி னைத்தொனிப்ப
படப்பைதொ றுந்தரள மணிக்குவை கண்டுகளை
யெடுப்பவ ருந்திவிட மாத்துறு மந்திகுதி
பாயவளர் வாழையடி சாயவொரு மாபலவின்
மோதவிழு தேனருவி யேறுவயல் சூரநகர் வருதாயே

பார்த்தனுக்கு ருக்கமிக்கு வேட்டுருக்கொ டுற்றகத்தர்
யாக்கியத்தை யொத்தபெத்த நாச்சியற்பு தத்துரைச்சி
படிப்படி யுன்றனடி பிடித்தடி யன்கவலை
விடுத்திட வந்தவிது வுனக்கும றிந்ததுச
பாசுவெரு வேலெனவு னேசமொழி கூறியடி
யேனைநனி யாளவிது வேளையிது வேளைசிவை உமையாளே.

வேறு.

வாதந் தலைவலி சீதஞ் சுரமுளி வாதங் குலைவலி கயரோகம்
மாறுந்திமிர்செவிரோகம்பலகொடுவாடுஞ்சிறுமதி யுடையோரே
வேதம் புகழ்பிர மாவும் பணியுமை வீசுங் கலைமதி முகமானள்
வீறுங்காடகபோலம்பொலிமதவேழத்தனையரு ளொருமாதா
ஓதுங் கனகவி ராஜன் சுவைபல வூறுங் கொடுதிரி தருதேவி
ஓான்பரைநலசோறுண்டிடுவெனவோடும்பணிசெயு மகமாயி
நீதம் பெருகிய சூரன் குடிவளர் நீலம் பிகைதனை நினைவீரேல்
நீடும்பெருமிதவாழ்வுந்தடையறநேருஞ்சுகமது பெறுவீரே.

வேறு.

சிவஞான சித்தி படியேனி ருத்தர் திருவாச கத்தை நினையேனே
சிவனுருரைத்தமனுவோதிபட்டதிருநீறுநெற்றி புனையேனே
தவறாத முத்தர் விதியோடு ரைத்த சரியான புத்தி வினவேனே
சடமூட மட்டி கதிகூட நிர்த்த சாரூப தத்தை யருள்வாயே

உவாமழி வற்ற வொருவேல்வி டுத்த வுரவோனி னித்த வொருதாயே
உலகாயதத்தின்மருளாதுறைத்தவுயர்வானபத்தர் பெருவாழ்வே
நவநாத சித்தர் மிகநாடி நித்தம் நலவாழ்வு கக்கு மொருதேவி
நவகோணசத்திபுவனாதாத்திநலவாமிபெத்தெ னுமையாளே.

வேறு.

படர்ந்த கானந் திரிதரு குருகுல மகிபாலர்
பதுங்கி வாழும் படியவர் கருதிப வொருகாலம்
அடர்ந்த தூணஞ் சிலைகதை முதலிய படையாவும்
அறிந்தி டாதுன் சநிதியின் வனிமர விடரூடே
இடுஞ்ச காயம் புரிவது கருதினை யதுபோலும்
இருண்ட காடுந் தலமென மருவினை யகலாதே
திடங்கு லாவுங் கலைபொருண் முதலிய பலவாழ்வுஞ்
சிறந்த சூரன் குடிநகர் மருவிய உமையாளே.

வேறு.

மத்த வாரணக போல மோசிறக
ஞத்த மேருமலை யோவு லாசமதன்
வைத்த மாமுடிகொ லோவ லோகமல முகைதானோ
மட்ட ஞாதசிபி ழோவி லாகலித
ழைத்த சீதவிள நீரி தோவெனவு
மட்டி மாதர்தன மீதி லாசைகொடு திரிவேனோ
பத்து நாலுமொரு நாலு மானதொகை
பெற்ற நாளில்துரி யோத னாதிபடை
பட்டு வீழவுயர் தேர்க டாவுநா ரிமாயன்
பச்சை மாண்மகிழ்ச கோத ரீகருணை
வச்சு மாமறைப ராவு சிறடிய
பத்தன் மாமுடியின் மீது சூடியருள் புரிவாயே
கொத்து மாமலர்கு லாவு சோலைதொறு
நிர்த்த மாமயில்க ளாட மாவிணர்கள்
கொத்தி யேகுயில்கள் பாட நாடியொரு கருணைகம்

கொட்டை யானவொரு காயை நாதமிகு
கொட்டி தாமெனவு மோத நாடகமி
குத்த தாயிதழி மாழை தாவுமுயர் வளமேவும்
முத்தர் வானவர்த போத ஞாதியர்கள்
நித்த மேவிநல யாம ளாகமக
முக்க மோதியிருண் மேவு சூரநகர் வருதாயே
முக்க ணாயகர்தன் வாம பாகமுறை
பெத்த நாயகிகு பேர வாழ்வினொடு
முத்தி நாடுமருண் மாத யாபரியென் உமையாளே.

முளைப்பாட்டு.

கமலச்சுந்தரி பணியச்சந்ததங்
கதியைத்தந்திடுங் காட்சி—தருங்
காரணிபெத்த நாச்சி—அலங்
காரங்குடிகொள் சூரன்குடியிற்
கருணைநேர்விசா லாக்ஷி. (க)
இபக்குஞ்சரி யிதயப்பஞ்சரி
யிலவப் பூங்கனி வாயாள்—பணிந்
திலகு மன்பரைக் காயாள்—மனத்
தெத்தேசத்தவ ருத்தேசிக்கினு
முற்றுதரிக்குந் தாயாள். (உ)
அருணப்பொன்கொடி கருணைச்சங்கரி
அமுதச்செந்தமிழ் பாட—மன
முருகித் தொண்டர்கொண்டாடப்—பல
அல்லலைத்தருந் தொல்லைமுற்றிலுஞ்
சொல்லாமல்வெருண் டோட. (௩)
தருணத்தந்திதன் சரணப்பங்கயந்
தலையிற்சந்ததம் பதிப்போம்—பல
மலரைச்சிந்தியுந் துதிப்போம்—நறுஞ்
சந்தூரந்திருச் செந்தூர்க்கந்தனைச்
சிந்தையிற்றின மதிப்போம். (௪)

நானிலத்தினு மேனிலத்தினு
மேன்மைபெற்றுயர் காந்தி—மதி
நளினவாசக மாந்திச்—சிவ
ஞானப்பொருளை விரித்தவெங்குரு
நாதன்பொற்பத மேந்தி. (ரு)

தானத்துஞ்சிவ ஞானத்துஞ்சிறந்
தாரைக்கும்பிடு போட்டுக்—கவி
சாற்றுவோம்புகழ் நாட்டு—திருச்
சங்கமெச்சிய சங்கமுத்துசெய்
சந்தச்செந்தமிழ்ப் பாட்டு. (சா)

வேறு.

அங்கம்மாதங்கம்மா சங்கம்மாகெங்கம்மா
ஆவுடையாட்சிமீ ஞக்ஷி—வடி
வழகிமுத்துக்கா மாக்ஷி—கன்னி
அன்னம்மாபொன்னம்மா சின்னம்மாசென்னம்மா
ஆதிலக்ஷ்மி பேச்சி. (எ)

மங்களமாகவி ளங்குநம்மூரில்ம
ஹாஜனம்யாவருங் கூடி—மூளை
வளர்த்துமேவிளை யாடிக்—குளிர்
மருதப்பூங்கிளி யாள்திருக்கோயில்முன்
னெருதுகட்டவே ராடி. (அ)

கொட்டகைப்பந்தல்கள் கட்டியிருக்கிற
திட்டத்தைப்பார்க்கவே ஷோக்கு—அதிந்
கட்டுங்குலைப்பச்சைப் பாக்குப்—பசுங்
கொத்திளவாழைநி ரைத்தவிதஞ்சொலக்
கோடிக்குமேல்வேணும் நாக்கு. (கூ)

குட்டிவாரவின முட்டிச்சிதைந்தகு
லைக்கனிவாழையின் சாறு—மடை
கொண்டுவயலிடைச் சேருஞ்—சூரன்
குடிச்சிங்காரிபெத் தாசிகோயிலிற்
கொலுவிருப்பதைப் பாரும். (ய)

வேறு.

மாமரச்செழுங் காவிலேவெகு வாமணத்திடும் பூவிலே
வண்டினங்கொழும் பாவிலேகதி கொண்டெழும்புமோர் தாவிலே. ()

காமாங்குயில் பாடவேமயில் கண்டுநாடக மாடவே
கனகப்பூங்கிளி கூடவேமது காங்களற்புதம் நாடவே. (கஉ)

கரும்புக்கொல்லையில் முத்தமேமுனி வரும்புக்கொல்லையில் முத்தமே
கழனிக்குட்புரிந் திருக்கவேகண்டு களையெடுப்பவர் வெருக்கவே. ()

தரும்புத்தகங்கொள் மெய்யரேவிா தரும்புத்தகங்கொள் கையரே
தாமரைப்படு மணிகளேதடந் தாமரைத்திர ளணிகளே. (கச)

மதுரப்பூங்கனி கவ்வியேகுரங் கதிரப்பூங்கனி தவ்வியே
மஞ்சளிஞ்சிகள் வளரவேமது வடிக்குமாங்கனி கிளறவே. (கரு)

நதியிற்பாய்ந்திடும் வாளையேசெலுங் கதியிற்சாய்ந்திடும் பாளையே
நடனமாதர்கள் நடிப்பரேமறை படனமாந்தர்கள் படிப்பரே. (கசு)

தானந்தயவு பாக்கியஞ்சமஸ் தானந்தனிலும்சி லாக்கியம்
தகுதிமுறைமை யோக்கியம்நிரந் தாமுஞ்சிறந்த போக்கியம். (கஎ)

ஞானங்கலைகள் விரியுமேமஹா லக்ஷ்மிநடனம் புரியுமே
நாரணாண்மலர்ப் பொய்கையேதிகழ் சூராமாநகர்ச் செய்கையே. (கஅ)

வேறு.

சிறந்தகந்தன் றாயெனமேவிய தேவியெம் பெத்தநாச்சி
செஞ்சரணந் துதிப்பாமே—இமயவல்லி
செஞ்சரணந் துதிப்பாமே. (கசு)

செறிந்தசந்தங் காநிரைமேவிய சிரார்மதுரையென் னுஞ்
செல்வத்திருநகரிலே—வளஞ்சிறந்த
செல்வத்திருநகரிலே. (உ0)

தனம்பொருந்தும் கோமகன்மாமகள் மீனும்பிகையெனும்பேர்
தாங்கிமகத்தில்வந்தாயே—மயக்கவலை
நீங்குமகத்தில்வந்தாயே. (உக)

மனந்திருந்தும் படியருள்பூரணி மாதாவெம்பெத்தநாச்சி
மாதிரமெங்கும்வென்றாயே—அடியர்மன
மாதிரமென்றுநின்றாயே. (உஉ)

25

சிலம்பலம்புஞ் சீரடிமேவிய தேவியெம்பெத்தநாச்சி
சிங்கத்தி லேறிவந்தாயே—மனமெனுங்கு
ரங்கைச்சிறிதுகந்தாயே. (உ௩)

நிலந்தொழுஞ்செங் தாமரைமாமுக காளியெம்பெத்தநாச்சி
நித்யகல்யாணியன்னமே—அனைத்துயிரும்
பத்திபுரியுஞ்சொன்னமே. (உ௪)

சுரும்புதுன்றுங் கோதைமனோன்மணி மாதாஎம்பெத்தநாச்சி
துய்யகிருபைதருவாய்—உனதடியர்
உய்யும்படிமுன்வருவாய். (உ௫)

கரும்பினின்சொல் மாதுதுரோபதி சீதாசந்திரமதி
காலடிப்பட்டஇந்தியா—தனிற்பிறந்துங்
கம்பீரவாழ்க்கையிந்தியா. (உ௬)

மணம்பொருந்துந் தாமரைமேவிய வேதாவிதியதனை
மாற்றும்வல்லவியல்லவா—எம்பெத்தநாச்சி (உ௭)
மகிமையுனக்கேசொல்லவா.

குணம்பொருந்துந் தேமறை யோன்மகன் ராஜாவிக்ரமாதித்தன்
கொண்டவரமோராயிரம்—எம்பெத்தநாச்சி
கொடுத்தவயதீராயிரம். (உ௮)

களங்கமுந்திரி யுங்கிடை யாதுயர் பூஜாமறைபவனைக்
காத்தகருணைக்கன்னியே—கனகமன்றக்
கூத்தாருமைப்பன்னியே. (உ௯)

உளங்கனிந்துன்சீரடி பாடிய பாவாண ரன்புமிகும்
உத்தமர்யாரும்வாழியே—தினமுஞ்சங்க
முத்துதமிழும்வாழியே. (௩௰)

காவடிச்சிந்து.

முத்தமிழு ணர்த்துபெத்த நாச்சி—சங்க
முத்துதமி ழுக்கருள்கா மாட்சி—இந்த
முச்சகமு மெச்சுபெரு
மைச்சரவ ணச்சிறுவன்—முதல்வி மலைபுதல்வி

சத்திமலை யத்துவசன் கன்னி—சிவ
சங்கரற்கோர் பங்கருள்விற் பன்னி—திருச்
  சந்நிதி மகிமைசொலப்
  பொன்னிதிகண் டன்னவின்பஞ்-சனிக்கும் மெத்தவினிக்கும்

மண்டிருளிற் கண்டுதொழ வெண்ணித்—தெய்வ
மாலைசந்த ஞதியொடு நண்ணி—வந்த
  மாவிளக்குச் சோதிகண்ட
  தேவருக்கு முண்டுமன வாட்டம் இமைநாட்டம்

வண்டுருக்கிக் கொண்டுபல நாட்டம்—காட்டி
வாலிபர்கள் கூடியாடு மாட்டம்—பொங்க
  வயிறுகுத்தி வாடினவர்
  கயிறுகுத்தி யாடிவரு-வார்கள் வெகுபேர்கள்

தாளமணி நாகசுர மேளம்—பம்பை
தப்புகிடு கிட்டியொடெக் காளம்—வலை
  சத்தகட லொத்துவிரி
  யெத்திசையுஞ் சத்தமொடு-தழங்கும் மிகமுழங்கும்

யாளிமுகத் தண்டிகையின் மீதே—எங்கள்
அன்னைபெத்த நாச்சிவரும் போதே—நகர்
  அத்தனையும் பத்தியொட
  மைத்தவள மைத்திருக்கண்-அணியே திருப்பணியே

சந்தமுளைக் கொட்டியிசைப் பாட்டுப்—பாடித்
தையலர்கள் செய்யுநடங் கேட்டு—நல்ல
  தந்திரித வீனத்தழுவிக்
  கந்தருவ மங்கையருஞ்—சாரும் படிநேரும்

விந்தைதருங் கந்தமலர் சூடிக்—கூடும்
வேளனைய வாலையெங்குஞ் சாடிப்—பல
  விருதுகட்டி வந்துநிற்கும்
  எருதுகட்டி விந்தைசெப்ப—வேணும் என்றேதோணும்.

பெத்தநாச்சி அம்மன் துதிமஞ்சரி
முற்றிற்று.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
சென்னை-600 008